# அர்ச்சாவதார வைபவம்

காரப்பங்காடு ஸ்ரீ. உ.வே. சிங்கப்பெருமாள் ஸ்வாமி

அர்ச்சையாவது, 'அர்ச்சா பூஜா ப்ரதிமயோ:' என்கிறபடி பிரதிமையென்று சொல்லப்படும். பிரதிமையாவது - தான் ஆராதிக்க வேண்டியதற்காகவும், அந்நியர்களுடைய உஜ்ஜீவனத்துக்காகவும், ஸ்வர்ணரஜதாதி திரவ்யங்களைக்கொண்டு, தனக்கு அபின்னமாயுள்ள விக்ரஹ ஸஜாதீயங்களாக, ஏறியருளப் பண்ணியிருக்கிற விக்ரஹங்களில் ப்ரதிஷ்டா விசேஷங்களாலும் ஸ்வ ஸங்கல்பத்தாலும் ஆச்ரிதோஜ்ஜீவநார்த்தம் ஸமஸ்த கல்யாண குண விசிஷ்டனாய்க் கொண்டு எழுந்தருளியிருக்கு மிருப்பு. இந்த விக்ரஹங்கள் ப்ராகிருத த்ரவ்யங்களால் ஏற்பட்டிருந்த போதிலும், 'தமருகந்ததெவ்வுருவம் அவ்வுருவம் தானே' என்கிற படியாலும், 'ந தஸ்ய ப்ராக்ருதா மூர்த்தி:' என்கிறபடியாலும், 'ந பூத ஸங்க ஸம்ஸ்தாந:' என்கிறபடியாலும், ஈசவரனுடைய ஸங்கல்பத்தாலே அப்ராகிருதங்களாகவே யிருக்கும். எப்படி விபவத்தில் விக்ரஹங்கள் ப்ராகிருத ஸஜாதீயங்களாயிருக்கச் செய்தேயும், அப்ராகிருதங்களென்று ப்ரமாண பலத்தால், கொள்கிறோமோ அப்படி இந்த அர்ச்சா விக்ரஹங்களும் அப்ராகிருதங்கள் என்று கொள்ளத்தட்டில்லை.

இங்ஙனன்றிக்கே, 'பிம்பா கிருத் பாத்மநாபிம்பே ஸமாகத் யாவதிஷ்டதே' என்கிறபடியே அந்த விக்ரஹங்களில் தத் ஸஜாதீயங்களான அப்ராக்ருத விக்ரஹங்களுடன், பாலும் நீரும் கலந்தாற்போல் எழுந்தருளியிருக்குமென்பது தேசிகன் திருவுள்ளம். எப்படியிருந்த போதிலும், இந்த அர்ச்சா விக்ரஹங்களில் ஸர்வஜன ஸாதாரணமாகவே ஸேவை ஸாதிக்கிற கிரமமில்லாமல், சில ஜ்ஞானதிகர்களுக்கும், அவர்களுடைய கடாக்ஷத்துக்கு விஷயமா யிருக்கிற சிலர்களுக்கும், இப்பொழுது ஸேவை ஸாதிக்கிற ப்ரகாரத்தைக்காட்டிலும், விலக்ஷண ஸௌந்தர்யனாய்க் கொண்டு ப்ரத்யக்ஷ விஷயமாகிறான். இந்த விஷயத்தை மணவாள மாமுனிகள், 'சிலர்க்கு அழகாலே பிறக்கும்' என்கிற ஸ்ரீ வசன பூஷண ஸூத்ர வ்யாக்நாவஸரத்தில் அர்ச்சையில் காதாசித்மாக விக்ரஹ ஸாக்ஷாத்காரமுடையவர்களென்று அருளிச் செய்திருக்கிறார். இதில் அர்ச்சையில் என்றும் காதாசித்கமென்றும் இருப்பதால் விலக்ஷண ஸௌந்தர்யாவிஷ்காரம் உண்டென்றே கொள்ளவேணும். இந்த விஷயம் பிள்ளை உறங்காவில்லிதாஸர் பூர்வாவஸ்தையில் தன்னுடைய பார்யை வெய்யிலில் வருகிறபோது, அவளுக்குத்தாம் நடை பாவாடை விரித்துக்கொண்டு வாரா நிற்க, எம்பெருமானார் கண்டருளி இப்படிச் செய்வதேன்? என்று கேட்க, இவளுடைய கண்ணழகுக்கு வெய்யிலின் தாபத்தால் வாட்டம் வருமென்று செய்தேன் என்று சொல்ல, அப்படியானால் இது தன்னிலும் விலக்ஷணமான கண்ணழகைப் பார்ப்பீர் வாரும் என்று அவரை அழைத்துக் கொண்டு போய்ப் பெரிய பெருமாளுடைய திருக்கண்ணழகை ஸேவிக்கப் பண்ணுவிக்க, அதுமுதல் அவர் விஷயாந்தர வைராக்யமுள்ளவராய் பகவத் விஷயத்தில் விசேஷமான பரிவுடையவராயிருந்து

கொண்டு எப்பொழுதும் பெருமாளுடைய திருமேனி ரக்ஷகராகவே யெழுந்தருளியிருந்தார் என்று ஐதிஹ்ய மேற்பட்டிருக்கிறது.

ஆகையால் இப்போது ஸேவை ஸாதிக்கிற ப்ரகாரமில்லாமல் விலக்ஷண ஸாக்ஷாத்காரம் உண்டென்று ஏற்படுகிறது. இப்படியே தொண்டரடிப்பொடியாழ்வார் ஸ்ரீஸூக்தியில் 'போதரேயென்று சொல்லிப் புந்தியிற் புகுந்து தன்பால் ஆதரம் பெருக வைத்த அழகன்' என்பதாலும் இந்த விஷயம் ஸ்பஷ்டம். பட்டர் ஸ்ரீரங்கராஜ ஸ்தவத்திலும் ஆழ்வான் வரதராஜ ஸ்தவத்திலும் மற்றுள்ள ஸூக்திகளிலும் பெருமாளுடைய விக்ரஹ ஸௌந்தர்ய வர்ணனம் செய்திருப்பதற்கு நிபந்தனம் விலக்ஷண ஸௌந்தர்யஸாக்ஷாத்காரமே தவிர வேறில்லை அதிசயோக்தியென்று சொல்லுமது பகவத் விஷயத்தில் அநுபபந்நம்.

இந்த அர்ச்சாவதாரங்கள் ஸ்வயம் வ்யக்தமென்றும், ஆர்ஷமென்றும், தைவமென்றும், ஸைத்தமென்றும், மாநுஷமென்றும் பல ப்ரகாரபேதங்களை உடைத்தாயிருக்கும். இது பரார்த்தம்.

இங்ஙனன்றிக்கே தங்கள் தங்கள் கிருஹங்களிலும் ஸ்வார்த்தமாக ப்ரதிஷ்டிதங்களாயிருக்கும்.

இப்படியான அர்ச்சாவதாரங்கள் பரவ்யூஹாதிகள் போலன்றிக்கே, ஆச்ரயணத்துக்கு அத்யந்தோபயுக்தமானஸௌலப்ய பூர்த்தியிருப்பதால், ஆழ்வார்களும் ஆசார்யர்களும் இவற்றைப் போர விரும்பியிருப்பார்கள். பாஞ்சராத்ரத்திலும் "ஜ்யாயாம்சவைவோத்த ரோத்தர:" என்று மிக மேலானதாகச் சொல்லப்பட்டது. இப்படி இந்த அர்ச்சாவதார வைபவம் பல ப்ரமாணங்களாலும் ஸித்திக்கும். ஸ்ரீராமாயணத்தில் இக்ஷ்வாகு குல ராஜாக்களுக்கு ஆராதநீயமான மூர்த்திவிசேஷம் அர்ச்சாவதாரம் என்றறியலாம்படி "ஸஹ பத்ந்யா விசாலாக்ஷ்யா நாராயண முபாகமத்; அலங்கார விதிம் க்ருத்ஸ்நம் காரயாமாஸ வேச்மநி:" என்றும், "ஸ்ரீமத்யாயதநே விஷ்ணோ: சிச்யே நரவராத்மஜ:" என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்ரீபாகவதத்திலும் பலராமனுடைய தீர்த்த யாத்திரையில் "ஸ்ரீரங்காக்யம் மஹாபுண்யம்" என்றும், ஏகாதச ஸ்கந்தத்தில் அர்ச்சா விக்ரஹ ப்ரதிஷ்டை முதலானதும், வ்யக்தமாகச் சொல்லியிருக்கிறது.

இவ்வாறு அர்ச்சாவதார மஹிமை ஒருவாறு ஸூசிக்கப்பட்டுள்ளது காண்க.